**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

---

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 10 திகதியும் கணக்காய்விற்காக முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 பெப்ரவரி 29 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 24 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்கவேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) 2009 ஆம் ஆண்டில் நன்கொடையாக வழங்கப்பட்ட பிக்கப் வாகனமும் உழவியந்திரமும் உரிமை மாற்றம் செய்யப்பட்டு, பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களும் வண்டிகளினதும் பெறுமதி கணக்குகளில் குறைத்து காட்டப்பட்டுள்ளது.

(ஆ) தலைமை அலுவலகக் கட்டடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் கட்டடத்தின் பெறுமதி கணக்குகளில் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 கணக்குப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையினால் அளவைப் பதிவேடுகள், காணி விற்பனவு வரி பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ஓய்வூதியர்களின் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல், பயனாளிகளின் உறுதிப்படுத்தல், கூறுவிலை ஆகியன இல்லாமையின் காரணமாக ரூபா 481,367 பெறுமதியான கொடுப்பனவுகளைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.5 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள்** | |
| அத்தியாயம் III விதி 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன் வீதவரி அறவீடு சபையினால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஒழுங்குவிதிகள் | |
| (i) நிதிப்பிரமாணம் 103 | ரூபா 21,965 பெறுமதியான நீர்பம்பி களவாடப்பட்டிருந்தமை தொடர்பாக பொறுப்புச்சொல்ல வேண்டியவர்களை இனங்கண்டு நட்டத்தை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 316(2) | காவற்கட்டுக்காப்பில் வைக்கப்படும் பொருட்களுக்கான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவினத்தை விடக்கூடிய வருமானமாக ரூபா 67,689,361 தொகையாக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்தை விடக் கூடிய வருமானமாக ரூபா 45,356,298 இருந்தது. இதன்படி மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 22,333,063 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகை ரூபா 3,891 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகை ரூபா 4,857 விளைந்திருந்தது. இதன்படி மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 966 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 262,639,035 ஆகக் குறைந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 114,442,725 ஆக இருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 148,196,310 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.4 வருமான நிர்வாகம்

### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| இறைகளும் வரிகளும் | 600 | 626 | 5,246 |
| குத்தகை வாடகைகள் | 14,061 | 15,476 | 375 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,808 | 2,070 | - |
| ஏனைய வருமானங்கள் | 106,448 | 103,697 | 191,327 |
| **மொத்தம்** | **122,917** | **121,869** | **196,948** |

### 2.4.2 ஆதனவரி

சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள ஆதனங்களிற்கு 05 வருடங்களுக்கொருமுறை மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 குத்தகை

2012 ஆம் ஆண்டிலிருந்து இறைச்சிக்கடை குத்தகை நிலுவை மற்றும் தண்டப் பணம் ரூபா 26,892 அறிக்கையிடும் திகதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,029,348 இன்றுவரை சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 136,236,619 பெறுமதியான முத்திரைக் கட்டணம் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

சபையில் 123 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 94 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன் பிரகாரம் 30 பதவியினர் பற்றாக்குறையாகவும் 01 பதவியினர் மேலதிகமாகவும் உள்ளனர்.

### 3.2 செயற்திட்டத்தின் தாமதம்

மீளாய்வாண்டில் ரூபா 30,736,363 பெறுமதியான மூலதன வேலைத்திட்டங்கள் சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப் பொருட்கள் தரம் பிரிக்காது ஒன்றாகக் குவிக்கப்படுகின்றது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டு செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 2,517 தொடக்கம் ரூபா 10,708,222 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.